மோசடிப் பேர் வழி BLM பிரேம்குமாருடன்

டம்மி முதலமைச்சர் விஜய்க்கு என்ன ரகசியக் கூட்டணி!

தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி!

5000 கோடி ரூபாய் முதலீட்டைச் சுருட்டித் தன் சொந்தக் கணக்கில் பதுக்கிய BLM பிரேம்குமாரைக் கேரள காவல்துறை கைது செய்துள்ள நிலையில்... அந்த மாபெரும் மோசடிப் பேர்வழியுடன் 'டம்மி' முதலமைச்சர் விஜய்க்கு என்ன ரகசியக் கூட்டணி?


சட்டப்பேரவை நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, எம்.எல்.ஏக்களை கூட்டிவந்தது இதே மோசடிப் பேர்வழி பிரேம்குமாருக்குச் சொந்தமான பேருந்துகளில்தானே? தவெக நிகழ்ச்சிகளுக்கும் இவரது பேருந்துகள் பயன்படுத்தப்பட்டதன் மர்மம் என்ன?

கூட்டனிக்கு 'சோபா' சப்ளை செய்தது, எம்.எல்.ஏக்களை விலைக்கு வாங்கியது, இடைத்தேர்தல்களில் பணத்தை வாரி இறைத்தது, என ஒட்டுமொத்த தவெகவின் ஜனநாயகப் படுகொலைகளுக்கும் ஃபைனான்ஸ் செய்தது மக்களின் இரத்தத்தை உறிஞ்சிய இந்த 5000 கோடி ஊழல் பணம்தானா?

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி எழுப்பியுள்ளது.



ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; ஒரு சினிமாவிலே 'கிணத்தை காணோம்'ன்னு ஒரு சீன் இருக்கும். அது மாதிரி இந்த ஆட்சியிலே. 'தடுப்பணையே காணோம்'ன்னு சொல்றாங்களே, கேள்விப்பட்டியா?

போண்டி : **ஆமாய்யா; கேள்விப்பட்டேன். கோவைக்கு அருகே காரமடை பகுதியிலே ஒரு தடுப்பணையை காணோமாம். த.வெ.க. ஆதரவாளர் ஒருவர்தான் ரியல் எஸ்டேட் பிசினஸ்சுக்காக அதை சமப்படுத்திட்டாருன்னு. சொல்றாங்க. உண்மையான்னு தெரியலை, அதிகாரிகளைக் கேட்டா, விசாரணை நடக்குதுங்குறாங்க. இது எப்படி இருக்கு?**

அண்ணாநகர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

மிசா சோ.மா.இராமச்சந்திரன் மறைவு!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 31-

அண்ணாநகர் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் மிசா சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் நேற்று (30.10.2026) மறைவுற்ற செய்தியறிந்தும் சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நூற்றாண்டு கண்ட மூத்த உடன்பிறப்பு - அண்ணா நகர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் வயது மூப்பினால் உயிரிழந்த செய்தியறிந்து வருந்தினேன்.

அண்ணா காலத்திலேயே கழகத்தில் இணைந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனதுக்கு நெருக்கமான செயல் வீரர்களில் ஒருவர். கழகத்தலைவர் அவர்களின் பாசத்துக்குரியவர்.

கலைஞர் அவர்கள் அண்ணா நகரில் களம் கண்ட போது, அவர்களுடைய வெற்றிக்காக இரவு பகல் பாராமல் உழைத்தப் பெருமைக்குரியவர் - அண்ணன் இராமச்சந்திரன் அவர்கள்.

அண்ணா நகர் பகுதிக்கழகச் செயலாளராக அவர் பொறுப்பு வகித்த காலத்தில், எதிர்க்கட்சி என்ற நிலையிலும் அண்ணா நகரை கழகத்தின் கோட்டையாக மாற்றிய உழைப்புக்குச் சொந்தக்காரர்.

ஒரே கொடி - ஒரே இயக்கம் - ஒரே கொள்கை என்று வாழ்ந்து மறைந்துள்ள அண்ணன் சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் வாழ்க்கை கழக உடன்பிறப்புகளுக்கெல்லாம் ஒரு பாடம்.

அண்ணனின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதைச் செலுத்தி, அவரது குடும்பத்தார் - நண்பர்கள் - கழகத்தினருக்கு ஆறுதலையும் - இரங்கலையும் தெரிவித்தேன்.

அண்ணன் சோ.மா.இராமச்சந்திரன் அவர்களின் பணிகள் கழக வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு அவர் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை கிழக்கு-வடக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தலைமையேற்று கண்டனப் பேருரையாற்றுகிறார்!

மகளிர் அணியினர், மகளிர் தொண்டரணியினர் மற்றும் கழக மகளிர்கள் பெருந்திரளாகப் பங்கேற்க சென்னை கிழக்கு-வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. - ஆர்.டி. சேகர் வேண்டுகோள்!

சென்னை,அக்.31-

சென்னை கிழக்கு-வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. - ஆர்.டி. சேகர் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், தலைமைக் கழகத்தின் அறிவிப்பின்படியும், தமிழ் நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக எழுந்துள்ள அச்சம், சட்டம்-ஒழுங்கு சீர் கேடு, போதைப்பொருள் புழக்கம், அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு மற்றும் அறிவிக்கப் படாத மின்வெட்டு உள்ளிட்ட மக்கள் நலப் பிரச்சினைகளைக் கண்டித்து, சென்னை கிழக்கு-வடக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில், இன்று (31.10.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமை யேற்று, த.வெ.க. அரசின் செயல்பாடுகளைக் கண்டித்து கண்டனப் பேருரை யாற்றுகிறார். ஆர். வனிதா குமாரி அவர்கள் பங்கேற்கிறார்.





த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள்கூட நிறைவடையாத நிலையில், பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு, போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் மக்களின் வாழ்வாதாரம் தொடர்பாகப் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள், குழந்தைகள் கடத்தல் உள்ளிட்ட சம்பவங்கள் பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகப் புகார்கள் எழுந்துள்ளன.

பெண்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் 'சிங்கப் பெண்' சிறப்புப் படையின் செயல்பாடுகள் குறித்தும், பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் உரிய விளக்கம் அளிக்க வேண்டும்.

பெண்களின் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு பெண்ணின் அடிப்படை உரிமை! சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதும், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதும், மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்வதும் அரசின் தவிர்க்க முடியாத கடமை!

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தியும், த.வெ.க. அரசின் செயல்பாடுகள் குறித்து எழுந்துள்ள மக்கள் நலக் குற்றச்சாட்டுகளுக்கு உரிய பதிலளிக்க வலியுறுத்தியும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

எனவே, இன்று (31.10.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையேற்று கண்டனப் பேருரையாற்றும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், சென்னை கிழக்கு-வடக்கு மாவட்டங்களுக்குட்பட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கழக மகளிர் அமைப்பினர், உள்ளாட்சி அமைப்புகளின் மகளிர் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழியர்கள், தோழர்கள் அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

செஞ்சியில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு பாராட்டு விழா!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்–ஒன்றிய முன்னாள் அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் பங்கேற்பு!

செஞ்சி, அக். 31 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மேல்மலையனூர், வல்லம், மயிலம், ஒலக்கூர், மரக்காணம் ஆகிய ஒன்றியங்களில் 2021-2026 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சி பதவிக் காலம் முடிந்த உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு செஞ்சியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

விழாவிற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு சந்தன மாலை, சால்வை அணிவித்து பாராட்டினார். முன்னாள் ஒன்றிய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார்.

விழாவில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்,

"முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் ஆட்சி செய்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உள்ளாட்சியில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு அளித்து, உள்ளாட்சியில் 60, 70 சதவீதம் பெண்களை அமர வைத்து அழகு பார்த்தவர்.

கடந்த திராவிட மாடல் ஆட்சியில் கழகத் தலைவர் கொண்டு வந்த திட்டங்களை வரவேற்ற வாக்காளர்கள், அவருக்கு வாக்களிக்க தவறி விட்டோமே என வேதனைப்பட்டனர். ஆனால் இன்று நடிகர் விஜய்க்கு வாக்களித்தவர்கள், இப்படிப்பட்டவர்களுக்கு வாக்களித்து விட்டோமே, தவறு செய்து விட்டோமே என வருத்தப் படுகின்றனர்.

இதுதான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சிக்கும், நடிகர் விஜய் ஆட்சிக்கும் மக்கள் மத்தியில் உள்ள மனநிலை. காலம் நிச்சயம் மாறும், மீண்டும் ஒரு பொதுத் தேர் தலை சந்திப்போம், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை முதலமைச்சராக ஆக்குவோம் என்ற உறுதிமொழியை எடுக்க வேண்டும்" என்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், ஒன்றிய குழு தலைவர்கள் கண்மணி நெடுஞ்செழியன், அமுதா ரவிக்குமார், யோகேஸ்வரி மணிமாறன், தயாளன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், சாந்தி சுப்பிரமணியன், மொடையூர் துரை, இளம் வழுதி, மணிமாறன், ராஜாராமன், பழனி, ரவிசந்திரன், ஒன்றிய துணை சேர்மன்விஜயலட்சுமி முருகன்,மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, செல்வி ராம சரவணன், அன்பு செழியன், விஜயன், மனோசித்ரா ராஜேஸ்வரன், புஷ்பவல்லி, குப்புராஜ்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட முன்னால் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் தலைமை தீர்மானகுழு உறுப்பினர் சேது நாதன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கடலூர் அக். 31.

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் குறித்து கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் எம். எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, கழக இளைஞரணி செயலாளர் சட்ட மன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி, கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் 02.11.2026 திங்கள் கிழமை காலை 10.00 மணியளவில், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர்.கொ. நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதிகள் - கழக அயலக அணித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி மற்றும் கழக அயலக அணி துணைச் செயலாளர் ப. பரிதி இளம்சுருதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.



அதுசமயம், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1) 22.8.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து.

2) கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் தெரிவித்துள்ளார்.

நிர்வாகத் திறமையற்ற த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்குச் சீர்கேட்டைக் கண்டித்து

திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் உடுமலைப்பேட்டையில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. வேண்டுகோள்!

திருப்பூர், அக். 31-

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க திருப்பூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் கேட்டை கண்டித்து உடுமலைப்பேட்டையில் இன்று (31ஆம் தேதி சனிக்கிழமை) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். இது குறித்து திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :

தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் புழக்கம், கொலை, கொள்ளை கண்டித்து தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்பின்படி வரும் அக்டோபர் 31ம் தேதி தமிழ் நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன்படி திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் (அக்டோபர் 31ம் தேதி சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலகம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது

மின்கட்டணச் சுமையும், மறுபுறம் மின்வெட்பாலும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். பெண்களின் பாதுகாப்பு சட்டம், ஒழுங்கு போதைப் பொருள் ஒழிப்பு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கிறது. நிர்வாக திறமையற்ற த.வெ.க. அரசின் சட்ட ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து உடுமலைப்பேட்டையில் மகளிர் அணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் அனைவரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய கேட்டுக்கொள்கிறேன்



இவ்வாறு திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மேல்மலையனூர், வல்லம், மயிலம், ஒலக்கூர், மரக்காணம் ஆகிய ஒன்றியங்களில் 2021-2026 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சி பதவிக்காலம் முடிந்த உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு செஞ்சியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், முன்னாள் ஒன்றிய அமைச்சர் செஞ்சிராமச்சந்திரன் ஆகியோர் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர் உடன் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



நாகை மாவட்டத்தில் மெத்தபெட்டமைன் (போதைப்பொருள்) பறிமுதல் மற்றும் அதுதொடர்பாக சர்வதேச போதை பொருள் கடத்தலுக்கு மூளையாக செயல்பட்ட தமிழக வெற்றிக் கழக (தவெக) நாகை மாவட்ட செயற்குழு உறுப்பினர் பூபாலன் கைது செய்யப்பட்டது குறித்து அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.இதனைத் தொடர்ந்து, செய்தி வெளியிட்ட பத்திரிகையாளர்களுக்கு மிரட்டல் விடுத்தும், காவல் நிலையங்களில் பொய் புகார்களை அளித்தும் வரும் நாகை மாவட்ட தவெக நிர்வாகிகளைக் கண்டித்து நாகப்பட்டினம் மாவட்ட பத்திரிகையாளர் மன்றம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. இதில் ஊடகவியலாளர் ஜீவசகாப்தன் உழைக்கும் பத்திரி கையாளர் சங்க மாநிலத் தலைவர் சகாய ராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஜி.கே.நிஜாமுதீன், மற்றும் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சா வூர், மயிலாடுதுறை, கரூர், காரைக்கால், நாமக்கல் பத்திரிகையாளர்கள் பங்கேற்றனர்.